# தமிழ் விமர்சன வளர்ச்சிக்கு எம்.எம்.எம். மஹ்ரூப் (பீ.ஏ.ஆனர்ஸ்) அவர்களின் பங்களிப்பு

செ.யோகராசா
*மொழித்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்.*

**திறப்புச் சொற்கள்:** *முன்னோடி, வீழ்ச்சி, புதுக்க விதைத்த*

## அறிமுகம்

தமிழில் விமர்சனம் என்பது நவீன இலக்கிய வடிவங்களுள் ஒன்றாகவும், நவீன காலத்திற்குரிய ஒன்றாகவும் விளங்குகின்றது. தமிழ் விமர்சன முன்னோடியாக தமிழ் நாட்டவரான வ.வே.சு ஐயர் (வரகனேரி வேங்கட சுப்பிரமணிய அய்யர்) கருதப்படுகின்றார். தமிழ் நாட்டில் விமர்சனத்தின் தோற்றமும், வளர்ச்சியும் பற்றி பல ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. ஈழத்து விமர்சன முன்னோடிகளாக க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, எம்.ஏ.நு.்.மான் முதலானோர் கருதப்படுகின்றனர். எனினும் ஈழத்துத் தமிழ் விமர்சனத்தின் தோற்றமும், வளர்ச்சியும் பற்றிய முக்கியமான ஆய்வுகள் எதுவும் நடைபெறவில்லை. உதிரியான, மேலோட்டமான சில ஆய்வுகள் மட்டுமே நடைபெற்றுள்ளன. இதனால்,ஈழத்து விமர்சன முன்னோடிகள், ஆளுமைகளுள் சிலர் இன்றுவரை அறியப்படாதுள்ளனர். இத்தகைய முக்கியமான விமர்சன ஆளுமைகளுள் ஒருவரே எம்.எம்.எம் மஹ்ரூப் ஆவார். எனவே தமிழ் விமர்சன வளர்ச்சிக்கு இவரது பங்களிப்பு பற்றி ஆய்வு செய்யப்படுவது அவசியமானதாகும். அத்தகைய முதல் முயற்சியாக இது அமைகின்றது.

## ஆய்வு முறையியல்

தமிழ் நாட்டு விமர்சன வளர்ச்சியுடன் ஒப்பிட்டு, ஒப்பீட்டு அணுகுமுறையிலும், வரலாற்று முறை அணுகுமுறையிலும், பகுப்புமுறை அணுகுமுறையிலும் இவ் ஆய்வு நடைபெறவுள்ளது.

## சுருக்கமும் முடிவும்

தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் விமர்சன வளர்ச்சியின் தோற்றம் பற்றியும், எம்.எம்.எம் மஹ்ரூப் காலம் வரையிலான அதன் வளர்ச்சி பற்றியும் முதலில் தெளிவுபடுத்தப்படும். இவ்வாறு நோக்கும் போதுதான் தமிழ்ப் புனைகதை பற்றிய ஆய்வு முறையியல் சார்ந்ததாக நடைபெறவில்லை என்பது தெரிய வருகிறது. புதிலாக, தமிழ்ப் புனைகதையின் தோற்றம், வளர்ச்சி பற்றி, ரசனை முறை நோக்கிலும் பாராட்டு முறை நோக்கிலுமே விமர்சனங்கள் இடம்பெற்று வந்துள்ளன. உதாரணமாக, தமிழ்ப்புனைகதையுள் ஒரு பிரிவான தமிழ் நாவல் பற்றிய கைலாசபதியின் ஆய்வு, குறிப்பிட்ட சில தலைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தே இடம்பெற்றுள்ளது. தமிழ்ப் புனைகதையின் மற்றொரு பிரிவான தமிழ்ச் சிறுகதையின் வரலாறு பற்றிய சிவத்தம்பியின் ஆய்வு வரலாற்று முறை அணுகுமுறையிலும் பகுப்பு முறை சார்ந்தும் இடம்பெற்றிருப்பினும் மேலும் விவரங்களை வேண்டி நிற்கிறது.

தொடர்ந்து, மஹ்ரூப் முக்கியமாக ஈடுபட்ட புனைகதை, புதுக்கவிதை ஆகிய துறைகள் பற்றிய விமர்சன வளர்ச்சி சிறப்பாக ஆராயப்படும். மேற்கூறிய பின்புலத்தில் தமிழகத்திலும்,ஈழத்திலும் புனைகதைத் துறையிலும், புதுக்கவிதைத் துறையிலும் மஹ்ரூப் வெளிப்படுத்திய விமர்சனக் கருத்துக்கள் பற்றி விளக்கப்படும். இவ்விதத்தில் மஹ்ரூப் புனைகதை வளர்ச்சி பற்றி விமர்சனம் செய்கின்ற போது புனைகதையின் (நாவல்,

சிறுகதை) தோற்றம் பற்றியும் முக்கியமான ஆளுமைகளான பாரதியார், புதுமைப்பித்தன், மாதவையா, கல்கி முதலானோர் பற்றியும் புதிய சிந்தனைகளை வெளிப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறே அவர் தமிழ் புதுக்கவிதை பற்றி நோக்கும் போது பலராலும் பாராட்டப்படும் தமிழக புதுக்கவிதை ஆளுமைகளான நா. காமராஜன், மீரா, இங்குலாப் முதலானோரின் புதுக்கவிதைகளை தக்க ஆதாரங்களுடன் மேலைத்தேய புதுக்கவிதையாளருடன் ஒப்பிட்டு புதிய முறையில் விமர்சிப்பதும் குறிப்பிடத்தக்கது. இறுதியாக ஆழமாகவும் ஒப்பீட்டு நோக்கிலும் அவதானித்து இத்துறைகளில் மஹ்ரூப்பின் பங்களிப்பு வெளிப்படுத்தப்படும்.

முடிவில் மஹ்ரூப் புனைகதைத் துறையிலும் புதுக்கவிதைத் துறையிலும், விமர்சன நோக்கில் ஈழத்திலும், தமிழ்நாட்டிலும் மிக முக்கியமானவர் என்பது சான்றாதாரங்களுடன் புலப்படுத்தப்படும்.

**சான்றாதாரங்கள்**


மஹ்ரூப் எம்.எம்.எம், தமிழ் நாட்டுப் புனைகதையின் தோற்றமும் வீழ்ச்சியும் - கட்டுரைத் தொடர், தினகரன் (16.05.1960 - 06.02.1968)

மஹ்ரூப். எம்.எம்.எம் (2002) புதுக்க விதைத்த சிந்தனைகள், வெளியீடு கன்ஷீல் உலூம்,"எம்.எம்.எம் மஹ்ரூப்" நினைவு மன்றம், கொழும்பு.

கைலாசபதி,க, (மீள்பதிப்பு 1999), தமிழ்நாவல், இலக்கியம், குமரன் பப்ளிகேசஷன்,சென்னை

சிவத்தம்பி,கா, (1978), நாவலும் வாழ்க்கையும், தமிழ்புத்தகாலயம், சென்னை

நுஃமான்,எம்.ஏ, (1989) மார்க்சிசமும் இலக்கயத்திறனாய்வும், அகரம், மதுரை

பாலச்சந்திரன் (பாலா), (1972), தமிழில் புதுக்கவிதைத் திறனாய்வு, அகரம், சென்னை